பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 14 | வியாழக்கிழமை | 31.10.2024 | அதிர்வு 90




# இலங்கை தேசத்தைப் பிளவுபடாமல் முன்னோக்கிக் கொண்டு செல்வோம்

## புதிய ஜனாதிபதி அநுர தீபாவளி வாழ்த்துச் செய்தியில் அழைப்பு



பிரித்து வலுவிழக்கச் செய்யப்பட்ட இலங்கை தேசத்தைப் பிளவுபடாமல் வலுவாக முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டிய காலம் உதயமாகியுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"இருள் நீங்கி ஒளிமயமாவதை அடையாளப்படுத்தும் முகமாக உலக வாழ் இந்து பக்தர்களால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. 05

## தொழில் ரீதியான போட்டியாலேயே பருத்தித்துறையில் தம்பதி கொலை!

### இரண்டு சந்தேகநபர்கள் கைது



யாழ். பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்கோவளம் – புனிதநகர் பகுதியில் கணவன் மற்றும் 05




யாழ்ப்பாண குடா நாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயத்தில் சில நிர்வாக குழப்பங்கள் குறித்து அச்சமயம் மாவட்ட அரசியல் பொறுப்பாளராக இருந்த நண்பர் ஒருவரிடம் நேரில் முறையிட்டேன். தலைமைத்துவ நடவடிக்கைகளில் குறைபாடு இருப்பதான என் குற்றச்சாட்டுக்கு அந்த அரசியல் பொறுப்பாளர் ஒரு விளக்கத்தை 05









# தமிழ் மக்களைத் தேசிய இனமாக புதிய அரசமைப்பு ஏற்க வேண்டும்

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வலியுறுத்து

**(எஸ்.நிதர்ஷன்)**

"இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் உருவாக்க வேண்டிய இலங்கைத் தீவின் புதிய யாப்பானது தமிழ் மக்களை இறைமையும் - சுயநிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்."

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி நேற்று யாழ்ப்பாணத்தில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.

கூட்டணியின் பங்காளிக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சித்தார்த்தன் தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உடைவு, தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள் எனப் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 8 முக்கிய அம்சங்களை அந்தக் கூட்டணி முன்வைத்துள்ளது.

அவற்றில், "தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொண்டால்தான் இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தலாம். எனவே, புதிய யாப்பானது இலங்கைத் தீவின் பன்மைத் தேசியப் பண்பை உறுதிப்படுத்தும் விதத்தில், அதாவது புதிய யாப்பானது இலங்கைத் தீவு ஒரு பன்மைத் தேசிய அரசாகக் கட்டமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான அலகானது ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களை ஒன்றிணைந்ததாக அமைய வேண்டும். குறித்த சுயநிர்ணய அலகுக்குள் வாழும் முஸ்லிம் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் தொடர்பில் திறந்த மனதோடு பேச்சு நடத்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எப்போதும் தயாராக உள்ளது.

மலையகத் தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படவேண்டும். மேலும் உடனடிப் பிரச்சினைகளுக்கும் அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்துவரும் கோரிக்கைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

இந்தத் தீர்வுகளுக்கான போராட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியானது மலையகத் தமிழர்களோடு தோளோடு தோள் நிற்கும்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு நடத்திய இன அழிப்பு, போர் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக் கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு, பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள்நிகழாமையை உறுதி செய்ய வேண்டும். இதுவரையிலுமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களின் தொகுக்கப்பட்ட அனுபவமாக, ஐ. நா. பொதுச்செயலாளரின் பொறுப்புக்கூறலை ஐ. நா. பொதுச் சபையிடம் பாரப்படுத்துவதன் மூலம் இன அழிப்புக்கு எதிரான பன்னாட்டு விசாரணைகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தியின் பெயரால் மேற்கொள்ளப்படும் நிலப்பறிப்பைத் தடுக்கவும், நமது வளங்கள் இன அழிப்பின் ஒரு பகுதியாகச் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் தமிழர் தாயகத்தின் தேசிய வளங்களை இயற்கையின் சமநிலை குலையாத வகையில் வினைத்திறனுடன் பயன்படுத்தவல்ல தற்சார்பு பொருளாதாரக் கட்டமைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். இதற்கேற்ற வகையில் தமிழர் தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளையும் உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீடுகளையும் உள்வாங்கும் அதிகாரம் தமிழர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

எமது நாட்டின் கடல் வளங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்கும், கடற்றொழிலாளர்கள் சமூகத்தின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்குமான வகையில், 2016ஆம் ஆண்டில் இலங்கை, இந்திய அரசுகள் மேற்கொண்ட கூட்டு இணக்கத்தின் அடிப்படையில் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்தல், 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க மற்றும் 2017 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கச் சட்டங்களை உறுதியான முறையில் நடைமுறைப்படுத்துதல், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களை வலுவாக்குதல், மீனவக் கிராமங்களிலிருந்து படைத் தரப்பினர் வெளியேறுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அம்மக்களின் பாதுகாப்பும் வாழ்வாதாரங்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஒரு நிரந்தர தீர்வை கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கத்தோடும் - தமிழர்களின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின் கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்." - என்று குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், சி.வேந்தன், சசிகலா ரவிராஜ், குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



# நீதி, கருணை, ஒற்றுமையின் ஆழமான உணர்வு எங்கள் இதயங்களில் ஒளிரட்டும்!

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் பிரதமர்

தீபாவளியின் ஒளி நம் இல்லங்களை ஒளிரச் செய்வது மட்டுமல்லாமல், நீதி, கருணை மற்றும் ஒற்றுமை ஆகிய வற்றின் ஆழமான உணர்வை நம் இதயங்களில் ஒளிர வைக் கட்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அனைவரும் சுதந்திரம், கண்ணியம் மற்றும் உரித்தை அனுபவிக்கக் கூடிய ஓர் உலகைக் கட்டியெழுப்ப நாம் மறு பரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.





# அரசுக்கு சொந்தமான இல்லங்களை ஒப்படைக்காத முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை

அரசாங்கத்திற்குச் சொந்தமான இல்லங்களை நேற்று வரை ஒப்படைக்காத முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் என நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை, உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

12 முன்னாள் அமைச்சர்கள் இதுவரை தங்களுக்கு வழங்கப்பட்ட அரசாங்க இல்லங்களை ஒப்படைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச அலுவலகங்களைக் கையகப்படுத்துவதற்கான விதிமுறைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலுவையில் உள்ள நீர் மற்றும் மின்சார கட்டணத்தை முழுமையாகச் செலுத்திய பின்னர் உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்குமாறு முன்னாள் அமைச்சர்களுக்கு அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தது.

இதன்படி நிலுவை கட்டணங்களை ஏற்க மாட்டோம் என்றும் அமைச்சு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதீத ஹெரோயின் பாவனையால் யாழ்ப்பாணத்தில் இளைஞர் சாவு!

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை அதிகளவில் உள்ளெடுத்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ். உரும்பிராயில் நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்த இளைஞர் ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாக இருந்தார். சிறிது காலம் திருந்தி வாழ்ந்த அவர் நேற்றுமுன்தினம் நண்பர்களுடன் சேர்ந்து ஹெரோயினை உள்ளெடுத்தார்.

இதையடுத்து வாயிலிருந்து நுரைதள்ளிய நிலையில் அவர் உயிரிழந்தார்.

அதிக ஹெரோயின் உட்கொண்டதே மரணத்துக்குக் காரணம் என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்தது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் யாழ், கிளிநொச்சி மாவட்டங்கள்

சுதந்திரம் பொது வாக்கெடுப்பு எமது பிறப்புரிமை கோரிக்கை

சிவாஜிலிங்கம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

செயலாளர் நாயகம் தமிழ்த் தேசியக் கட்சி





அரசாங்க உத்தியோகத்தர்களே!

வணக்கம்

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான தபால் வாக்களிப்பில் கலந்துகொள்ள இருக்கும் உங்களிடம் ஒரு வேண்டுகோள். இதை ஒரு தனிப்பட்ட வேண்டுகோளாக ஏற்றுக்கொண்டு, எனக்கு சங்குச் சின்னத்திலும் 2ஆம் இலக்கத்திற்கு மேலேயும் புள்ளடியிட்டு ஆதரிக்குமாறு, தயவுடன் வேண்டுகின்றேன்.

எனது 50 வருட அரசியல் வாழ்வில், நான் நடத்திய போராட்டங்கள், நினைவேந்தல்களை அரசாங்கம் தடுத்ததை உடைத் தெறிந்த விடயம் உட்பட பாராளுமன்றத்தின் உள்ளும், புறமும் போராடியதை நீங்கள் அறிவீர்கள் அந்தப் பயணத்தைத் தொடர உங்கள் ஆதரவை நாடி நிற்கின்றேன்.

- தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சர்வதேச சமூகம், வடக்கு கிழக்கு மக்கள் புலம் பெயர் தமிழர்கள் உட்பட அனைவரும் வாக்களிக்கக்கூடிய பொது மக்கள் வாக்கெடுப்பு ஒன்றை (Referendum) நடாத்துமாறு கோருகின்றோம்.
- தமிழ்த் தேசிய இனத்தின் வாழ்வுரிமைக்காக போராடுவோம்.

1 2 3 4 5 6 7 8 9

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி


# ஊவா, சப்ரகமுவ தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை




ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு நாளை விசேட விடுமுறை வழங்கப்படவுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விசேட விடுமுறை வழங்கப்படுகின்றது.

இவ்வாறு விடுமுறை வழங்கப்படும் தினத்திற்கு பதிலாக எதிர்வரும் 9ஆம் திகதி கல்வி நடவடிக்கைகள் நடைபெறும் என மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கேள்வியாகத் தந்தார்.

"அண்ணே! தலைமை சரியாக இருந்தாலும், தகவல்கள் பிழைத்தால் என்ன செய்வது?" - என்பதுதான் அவரது கேள்வி.

எனக்கு பதில் கூற எதுவும் இருக்க வில்லை.

இப்போது ஊழல், மோசடி, லஞ்ச லாவண்யம், நிர்வாகச் சீர்கேடு போன்றவற்றுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்று அறுதியிட்டுக் கூறி அதிகாரத்திற்கு வந்திருக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவின் நிர்வாகத்தில் வடக்கு சம்பந்தமான ஒரு நியமனம் தொடர்பில் எனக்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்துக்கு இந்த கேள்வியைத்தான் பதிலாக எனக்கு நானே கூறிக் கொள்ள வேண்டி இருக்கிறது என நினைக்கிறேன்.

ஒரு சபையின் தலைவராக தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்ட ஒருவரை நியமித்த அநுரவின் அரசு, அவர் பதவியேற்று ஒரு வார காலத்துக்குள், அதிரடியாக சர்ச்சைக் குரிய ஒருவரை அவரது இடத்துக்குப் புதிதாக நியமித்திருக்கிறது.

ஊழல், மோசடி, குளறுபடிகள் தொடர்பாக அந்நபரின் மீது இருக்கின்ற குற்றச்சாட்டுகள், மக்களின் கருத்து நிலைபாடுகள் அநுரகுமார திஸநாயக்கவின் தலைமைக்கு வடக்கிலிருந்து தகவல்கள் பிழையாக வழங்கப்பட்டுள்ளன என்பதைத்தான் நிரூபித்து இருக்கின்றன என்று கருத வேண்டியுள்ளது.

அந்த நபர் தொடர்பாக அரசாங்கத்தில் முக்கிய நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் ஒருவர் தன்னுடைய பெயர் குறிப்பிட்டு கூறியவற்றை சாட்சியமாக இங்கு முன் வைக்க விரும்புகிறேன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என நினைக்கிறேன்.

ஊழலிற்கு எதிராகச் செயற்படுவோம் என இந்த அரசு தெரிவித்த நம்பிக்கை, மேற்படி சபையின் தலைவர் நியமனத்தின் மூலம் தகர்க்கப்பட்டுவிட்டதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன் தெரிவித்திருக்கின்றார்.

"2013ஆம் ஆண்டு எனது மனைவியின் தாலிக்கொடியை நான் இழக்க காரணமானவர் இந்த அரசினால் வடக்கிற்குரியதான முக்கிய சபையின் தலைவராக நியமிக்கப்பட்டமையானது இந்த அரசிலாவது லஞ்சம், ஊழல், மோசடிகள் தடுக்கப்படும் எனக் காத்திருந்த எமக்கு பெரும் ஏமாற்றமாக உள்ளது.

"2011 ஆம் ஆண்டு நான் துணுக்காய் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய சமயம் அரசியல்வாதியாக வருகை தந்து துன்பப்பட்ட மக்களிற்கு உதவி புரியவுள்ளார் என அவர் என்னிடம் கூறிய சமயம் ஒரு கடையில் அவர் கொள்வனவு செய்த 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களிற்கு நான் பொறுப்பு நின்றேன். 2 ஆண்டுகள் கழிந்தும் அந்தப் பணம் கடை உரிமையாளருக்குச் செலுத்தப்படாதமையினால் வர்த்தகர் என்னை நாடினார். அப்போது இவரை பல தடவை தொடர்புகொண்டேன். இருந்தபோதும் தொடர்ச்சியாக ஏமாற்றி வந்தார். இதன் காரணமாக வேறு மார்க்கம் இன்றி எனது மனைவியின் தாலிக்கொடியை அடகு வைத்து அந்தப் பணத்தைச் செலுத்தினேன்.

தாலிக்கொடி அடகு வைத்த பின்பும் பல தடவை தொடர்பு கொண்டு தெரிவித்தும் அப் பணம் வழங்கப்படாது எனது மனைவியின் தாலிக்கொடியும் வங்கியில் மாண்டு போனது. அப்பேர்ப்பட்ட ஓர் மோசடிப் பேர் வழியே தற்போது அந்த சபையின் தலைவராக இந்த அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

"இவ்வாறு மோசடியை புரிபவர்களிற்கே இந்த அரசும் பதவிகளை வழங்கி கௌரவித்தால் இந்த நாடு எக் காலத்திலும் முன்னேற்றம் அடையும் என மக்கள் நம்ப மாட்டார்கள்" - என்றார் மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன்.

புதிய அரசை வடக்கு விடயங்களில் தவறாகவழிநடத்துபவர்கள்தங்களின்சின்னத்தனமான கைவரிசையைத் தொடர அனுமதித்தால், தமிழ் மக்களிடம் அநுர அரசு மண் கவ்வுவது நிச்சயம்....!

## இலங்கை தேசத்தைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுதந்திரத்துக்குப் பின்னர் இருளிலிருந்து வெளிச்சத்தைத் தேடி வந்த இலங்கை மக்கள் தற்போது புதிய எதிர்பார்ப்புக்களை சுமந்து கொண்டிருக்கின்றனர். இது மக்களின் பல வருட எதிர்பார்ப்பாகும்.

இத்தனை நாட்களாக இலங்கையை ஆட்சி செய்தவர்களால் முடக்கி வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை மலரச் செய்யும் மாற்றத்துக்கான யுகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

தீபாவளிக் கொண்டாட்டத்துக்குப் பல காரணங்கள் உள்ளன. 14 வருட வனவாசத்தின் பின்னர் இராமன், இலட்சுமணன், சீதை மீண்டும் அயோத்திக்கு வருகை தந்தமை மற்றும் கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவுகூரும் விதமாக இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

அஞ்ஞானத்தின் இருளைப் போக்க மெய்ஞானத்தின் ஒளியால் மட்டுமே முடியும் என்ற தொனியில் தீபங்களை ஏற்றி இலங்கையர்களாகப் புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக இம்முறை தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவோம் என மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

கலாசார பல்வகைத்தன்மையின் அழகை மெருகூட்டும் வகையில், ஒருவருக்கொருவர் கௌரவம், ஏற்றுக்கொள்ளல் மற்றும் சகோதரத்துவம் என்பவற்றுக்காகக் கரங்களை நீட்டுவோம்.

பிரித்து வலுவிழக்கச் செய்யப்பட்ட இலங்கை தேசத்தைப் பிளவுபடாமல் வலுவாக முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டிய காலம் உதயமாகியுள்ளது. அநீதி, வேறுபாடுகள், பிளவுபடுத்தல், வெறுப்புப் பேச்சுகள், வன்முறைகள் என்பதை முழுமையாகத் துடைத்தெறிந்து சமூகத்தில் வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வோர் மற்றும் வரப்பிரசாதங்கள் கிடைக்காதவர்கள் என்ற வேறுபாடுகளை முழுமையாக இல்லாது செய்ய முன்வருவோம்.

அவ்வாறான, இரக்கம் கொண்ட ஒரு புதிய கலாசார இருப்பை உருவாக்க முன்வருமாறு அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

இந்தத் தீபாவளியில், வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கை என்ற நமது எதிர்பார்ப்பு நனவாக வேண்டுமானால், அதற்கான கலாசார, அரசியல் ரீதியான மனப்பாங்கு மாற்றமும் அவசியமாகும்.

தீபாவளி தினத்தில் அனைத்து வீடுகளிலும், நகரங்களிலும் ஏற்றப்படும் ஆயிரக்கணக்கிலான விளக்கு ஒளிகள் அனைவரினதும் மனங்களில் நட்புறவு மற்றும் ஞானத்தின் ஒளியை பரவச் செய்வதாக அமையட்டும் எனப் பிரார்த்திப்பதோடு இலங்கைவாழ் இந்து பக்தர்களுக்கு தீபாவளி நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்." - என்றுள்ளது.

## தொழில் ரீதியான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனைவி கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த கணவனும், மனைவியும் கொங்கிறீட் கற்களால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுக் காலை சடலங்களாக மீட்கப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலையை மூவர் சேர்ந்து செய்துள்ளனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கொலையாளிகள் மூவரில் இருவர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

கொலையுண்ட மாணிக்கம் சுப்பிரமணியம் (வயது 54), அவரது மனைவி சுப்பிரமணியம் மேரி ரீட்டா (வயது 53) ஆகியோர் சலவைத் தொழிலில் ஈடுபட்டு வந்திருந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் விடுதியின் துணிகளைஒப்பந்தஅடிப்படையில்துவைப்பதற்காக ஏலத்தில் பெற்றுள்ளனர்.

இதன் காரணமாகத் தொழில் ரீதியில் ஏற்பட்ட போட்டியால் மூவர் சேர்ந்து தம்பதியினரைப் படுகொலை செய்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இரண்டு சந்தேகநபர்களில் ஒருவர் ஏற்கனவே இரு கொலைகளுடன் தொடர்பட்ட சந்தேக நபர் என்றும், அவருக்கு எதிரான வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதான கொலைச் சந்தேகநபர்கள் இருவரும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.





# வவுனியாவில் தபால் மூல வாக்களிப்பு

(கி.வசந்தன்)

வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்திலும் குறித்த வாக்களிப்பு செயற்பாடுகள் நேற்று சுமுகமாக இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்கள் தமக்கான தபால் மூல வாக்குகளை அளித்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணி முதல் வவுனியா மாவட்டசெயலகம் மற்றும் பொலிஸ் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களில் மேற்படி தரப்பினர் தமது வாக்குகளைச் செலுத்தினர்.

# கரையொதுங்கும் இனந்தெரியாத மீன்கள்



(எம். எப். றிபாஸ்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிச்குடி, களுதாவளை, தேற்றாத்தீவு, குருக்கள்மடம், ஒந்தாச்சிமடம் உள்ளிட்ட கடற் கரையோரங்களில் நாவல் – கறுப்பு நிறம் சார்ந்த ஒரு வகை மீன்கள் பல்லாயிரக்கணக்கில் கரையொதுங்கியுள்ளன.

இந்த மீன் இனம் பற்றி உறுதியாக எதுவும் தெரியாததால் இதனைச் சாப்பிட வேண்டாம் என அங்கிருக்கும் மீனவர்கள், பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# அரச பணியாளர்களை புறக்கணிக்கிறது அரசு

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

“அரச பணியாளர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு தற்போதைய அரசாங்கம் “டாட்டா” காட்டி இருக்கின்றது.”

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பன்னலையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பெரும்பான்மை இல்லாத நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் தெரிவாகி உள்ள சந்தர்ப்பத்திலேயே இந்த தேர்தல் இடம்பெறுகிறது.

அதனால் இந்த தேர்தலில் வெற்றிபெறுவது கஷ்டம் என நாங்கள் நினைக்கக்கூடாது அரசாங்கத்தை பெற்றுக் கொள்ள நாங்கள் முயற்சிப்போம். அவ்வாறு இல்லாவிட்டால் எதிர்க்கட்சியில் நாங்கள் பலமான இடத்துக்கு வரவேண்டும்.

சிலவேளைகளில் அரசாங்கம் தற்போது பயணிப்பதை பார்க்கும்போது எதிர்க்கட்சியில் இருந்து அரச அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியும் அது தொடர்பாகவும் மனதில் வைத்துக்கொண்டு நாங்கள் முன்னுக்கு வந்திருக்கிறோம்.

நாடு வீழ்ச்சியடைந்திருந்தபோது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப என்னுடன் முன்வந்தவ குழுவே தற்போது சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுகிறது.

எமது குழுவின் அனைத்து கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இவ்வாறு அனைவரும் கலந்து இருந்ததாலே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமாகியது.

இந்த வருடம் இறுதிவரைக்கும் பேதுமானளவு நிதி வழங்கிய பின்னரே நாங்கள் அரசாங்கத்தை ஒப்படைத்தோம். வெளிநாட்டு கையிருப்பு இருக்கிறது.

தற்போது அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு மாத்திரமே அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்கு அதனை செய்துகொள்ள முடியுமாகுமா என எனக்கு தெரியாது. அனுபவமுள்ள அணியொன்று இருந்தால் அரசாங்கத்தை சரியான திசைக்கு செலுத்த முடியும்

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அதிகாரிகளின் அனுமதியை பெற்றுக் கொள்ளவில்லை என பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித்திருந்ததை நான் கண்டேன்.

மக்களை ஏமாற்றுவதற்காக தேர்தல் காலத்தில் வழங்கி பொய் வாக்குறுதி எனவும் அவர் தெரிவித்திருந்தார். அமைச்சரவை செயற்படுவதற்கு அதிகாரிகளின் அனுமதி தேவை என பிரதமர் தெரிவிக்கிறார்.

அரசியலமைப்பு தொடர்பில் இவர் எங்கு கற்றுக் கொண்டார்? அரசியலமைப்பில் 43ஆவது உறுப்புரையை பாருங்கள். நாட்டை நிர்வகிப்பது அமைச்சரவையாகும்.

பிரதமருக்கு அரசியலமைப்பு தொடர்பில் தெரிந்து கொள்ள தேவை என்றால் சொல்லுங்கள் நான் வருகிறேன். இல்லாவிட்டால் முன்னாள் பிரதமர் வருவார்.

அமைச்சர்களின் வேலை நடவடிக்கைகளை அதிகாரிகளுக்கு வழங்கப்போகிறார்கள். இவ்வாறான குழுவுக்கு நாட்டை கட்டியெழுப்ப முடியுமா? அனுபவமுள்ளவர்கள் இருக்க வேண்டும்.

நான் ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சராகவும் தினேஷ் குணவர்த்தன பிரதமர் மற்றும் பொது நிர்வாக அமைச்சராகவும் கடந்த மே மாதம் 27ஆம் திகதி நாங்கள் எடுத்த தீர்மானத்துக்கமைய அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக எனது செயலாளர் சமன் ஏக்கநாயக்க கடந்த ஜுலை 11ஆம் திகதி விசேட நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்தார்.

என்றாலும் அந்த சம்பள அதிகரிப்பை வழங்க பணம் இல்லை என அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்திருந்தார். நான் பொய் சொல்லி இருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.



அரச ஊழியர்களின் ஆரம்ப பிரிவின் மாதாந்த அடிப்படைச் சம்பளம் 30ஆயிரம் ரூபாவாகக் கொண்டு, அரச சேவையின் நிலைவேற்று குழு, உயர் சேவை குழு, அமைச்சரவை செயலாளர் ஆகிய பதவிகளுக்கிடையில் 1:6 விகிதாசாரங்களுக்கு அமைவாக ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பள அளவு திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இரண்டு கட்டங்களாக இந்த சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமையவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் இருப்பவர்கள் அரச திணைக்களங்களின் பணிப்பாளர்கள், ஓய்வு பெற்ற அரச சேவை பணிப்பாளர்கள் மற்றும் தற்போதும் சேவையில் இருப்பவர்களாகும்.

இந்த குழுவில் இருக்கும் ஒருவர் தற்போது ஜனாதிபதியின் ஆலாசகராக இருக்கிறார். இவர்கள் அனைவரும் சம்பள அதிகரிப்பு அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இது தொடர்பில் பிரதமருக்கு தெரியுமா? அப்படியானால் இந்த விடயத்தை அரசாங்கம் பொய் என எவ்வாறு தெரிவிக்க முடியும்.

திறைசேரியின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அனைவருடன் இந்த சம்பள அதிகரிப்பு தொடர்பில் கலந்துரையாடி இருக்கிறோம்.

அதனால் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட பணத்தை அரச அதிகாரிகளுக்கு செலுத்த முடியும். இவர்களுக்கு கண்டு பிடிக்க முடியாத வகையில் பொய் சொல்ல தெரியாது.

பணம் இருக்கிறது. தேடிக்கொள்ளவும் முடியும். அதன் பிரகாரம் இந்த சம்பள அதிகரிப்பை வழங்க முடியும். அத்துடன் நான் ஒன்றை சொன்னால் நிச்சயமாக அதனை செய்வேன் திசை காட்டியை போன்று செயற்பட மாட்டேன். அதனால் எமது அணி மீது நம்பிக்கை வையுங்கள்.

எங்களுக்கு எதிராக வாக்களிக்குமாறு அன்று இவர்கள் அரச ஊழியர்களுக்கு கூறினர். அதன்படி அவர்களும் வாக்களித்தனர்.

இப்போது திசைகாட்டி அரச ஊழியர்களுக்கு டாடா காட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் எங்களால் தீர்மானிக்கப்பட்ட இந்த சம்பள அதிகரிப்புக்கு அரசாங்கம் இணங்கும் வரையில் நாங்கள் எதிர்ப்பை முன்னெடுப்போம்.

இந்த சம்பள அதிகரிப்பை கோரிய தொழிற்சங்கங்கள் எங்கே? இவர்களில் அதிகமானவர்கள் தற்போது அரசாங்கத்துடனே இருக்கின்றனர். இந்த தொழிற்சங்கங்கள் அரச ஊழியர்களை காட்டிக்கொடுத்துள்ளன.

அரச ஊழியர்களுக்காக தற்போது குரல்கொடுப்பது சிலிண்டரில் போட்டியிடுபவர்கள் மாத்திரமாகும். ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பில் கதைத்து பயன் இல்லை.”– என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மகிழ்வு தராத தீபாவளி

இன்று தீபாவளித் திருநாள். இந்துக்களின் முக்கிய பண்டிகை நாள்களில் இதுவும் ஒன்று.

'தீபம்' என்றால் 'விளக்கு'. 'ஆவளி' என்றால் 'வரிசை' என்று அர்த்தம். அதாவது விளக்குகளை வரிசையாக ஏற்றி ஒளியினால் கடவுளை வழிபடும் இந்தப் புண்ணிய நாளைத்தான் 'தீபாவளி' என்று போற்றுகின்றோம்.

அதனால், வாழ்க்கையின் இருளை நீக்கி, ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக தீபாவளித் திருநாள் கொண்டாடப்படுவதான நம்பிக்கை எல்லோர் மனதிலும் உண்டு.

இந்துக்கள் திபாவளியைக் கொண்டாடுவதற்கு பல காரணங்களை, புராணக் கதைகளின் வழியாகக் கூறுகின்றனர்.

இராமாயண இதிகாசத்தில், இராமர், இராவணனை அழித்து விட்டு, தனது பதினான்கு வருடங்கள் வனவாசம் முடித்து, மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்தி திரும்பிய நாளை, அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர் என்று ஒரு புராணக் கதை உண்டு.

இலங்கையிலும் பாரம்பரியமான கட்சிகளின் ஆட்சி அதிகாரம் முடிவுக்கு வந்து புதிய ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு வந்திருக்கின்றனர். இன்னும் இரண்டு வாரங்களில் நடைபெறப் போகின்ற பொதுத் தேர்தலின் பின்னர் அந்த ஆட்சியாளர்களின் புதிய அரசு பட்டாபிஷேகம் காணும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் இந்துக்களான தமிழர்கள் கொண்டாடும் ராம ராஜ்ஜியத்தின் பட்டாபிஷேகமாக அது அமையப் போவதில்லை என்பது திண்ணம். ஆகையால் இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் தமிழர்களை பொறுத்தவரை தீபாவளி திருநாள் போல கொண்டாடப்படக்கூடிய விடயம் அல்ல. அந்த ஆட்சி பீடத்தின் வருகை தமிழர்களுக்கு கொண்டாட்டத்துக்குரியதாகவும் இல்லை என்பது தான் யதார்த்த நிலைமை.

எனினும் அக்கொண்டாட்டத்தை அத்தகைய அர்த்தத்தில் மகிழ்வுடன் அனுஷ்டிக்க அழைப்பு விடுத்திருக்கின்றார் இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா.

"இருள் நீங்கி ஒளிமயமாவதை அடையாளப்படுத்தும் முகமாக உலக வாழ் இந்து பக்தர்களால் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. சுதந்திரத்திற்கு பின்னர் இருளிலிருந்து வெளிச்சத்தைத் தேடிவந்தஇலங்கைமக்கள்தற்போது புதிய எதிர்பார்ப்புக்களை சுமந்துக் கொண்டிருக்கின்றனர்.

"மாற்றத்துக்கான யுகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். இத்தனை நாள்களாக நாட்டை ஆட்சி செய்தவர்களால் முடக்கி வைக்கப்பட்டிருந்த பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை மலரச் செய்யும் மாற்றத்துக்கான யுகத்தை நாம் ஆரம்பித்துள்ளோம்.

"தீபாவளிக் கொண்டாட்டத்திற்கு பல காரணங்கள் உள்ளன. 14 வருட வனவாசத்தின் பின்னர் இராமர், இலட்சுமணர், சீதை பிராட்டி மீண்டும் அயோத்திக்கு வருகை தந்தமை மற்றும் கிருஷ்ண பகவான் நரகாசுரனை அழித்தமையை நினைவுகூரும் விதமாக இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அஞ்ஞானத்தின் இருளை போக்க மெய்ஞானத்தின் ஒளியினால் மட்டுமே முடியும் என்ற தொனியில் தீபங்களை ஏற்றி இலங்கையர்களாக புதிய புரட்சிக்கு வழிவகுப்பதாக இம்முறைதீபாவளிபண்டிகையைகொண்டாடுவோம் என மக்களிடம் கேட்டு கொள்கிறேன்." - என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

எனினும் அவரது ஆட்சி பீடத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள், சமிக்கைகள் தமிழ் மக்கள் வரவேற்கத்தக்கதான ஓர் அதிகார மாற்றம் தெற்கில் ஏற்பட்டிருப்பதான நம்பிக்கையைத் தமிழ் மக்களுக்குத் தரவே இல்லை என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறோம். அதனால் இந்த தீபாவளியும் தமிழர்களைப் பொறுத்த வரை புதிதாக மகிழ்ந்து கொண்டாடுவதற்குரியதாக அமையவில்லை என்பதுதான் உண்மை.





# விஜய்யை கோபப்படுத்த அஜித்துக்கு வாழ்த்தா?

## உதயநிதிக்கு தமிழிசை கேள்வி

“த.வெ.க. தலைவர் விஜய்யை கோபப்படுத்த நடிகர் அஜித்துக்கு துணை முதல்வர் உதயநிதி வாழ்த்து கூறுகிறாரா?”

– இவ்வாறு முன்னாள் ஆளுநரும், பா.ஜ.க. மூத்த தலைவருமான தமிழிசை சவுந்தரராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து சென்னையில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“முத்துராமலிங்க தேவர் மகிழ்ச்சியடையும் வகையில் திட்டங்களைக் கொண்டு வருவதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஆன்மிகவும் தேசியமும் இரு கண்கள் என முத்துராமலிங்க தேவர் கூறினார். ஆனால், ஆன்மிகமும், அரசியலும் கலக்க முடியாது என துணை முதல்வர் உதயநிதி கூறுகிறார். தேசியத்தையும் ஆன்மிகத்தையும் ஒரு சேர கொண்டு சென்றதால் தான் முத்துராமலிங்கனாருக்கு வெற்றி கிடைத்து. எனவே, தமிழக முதல்வர் ஸ்டாலின் தீபாவளி வாழ்த்து சொல்ல வேண்டும். ஆன்மிகமும், அரசியலும் இணைந்தே தான் இருக்கும்.

நடிகர் அஜித்துக்கு துணை முதல்வர் உதயநிதி வாழ்த்து கூறியுள்ளார். த.வெ.க. தலைவர் விஜய்க்கு கோபம் வரும் என்பதால் அவர் அஜித்துக்கு வாழ்த்து சொல்கிறாரா என தெரியவில்லை. உலக அரங்கில் விளையாட்டை முன்னிறுத்துவதற்கு அஜித்துக்கு வாழ்த்து சொல்லிவிட்டு, சாமானிய மக்கள் பயன்பெறும் விளையாட்டு திடல்களுக்கு கட்டணம் நிர்ணயிப்பதற்கு வன்மையான கண்டனங்கள். இதேபோல், அம்மா அரங்கம், சர்பிட்டி தியாகராயர் அரங்கமும் தனியார் வசம் கொடுக்கப்படுகிறது. மக்கள் பயன்பெறும் வகையில் வாடகையை குறைத்து, அரங்கங்களை அரசு நடத்த வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் வலைதளப் பதிவில், “உலக அளவில் சிறப்புக்குரிய 24 ஹெச் டுபாய் 2025 மற்றும் தி யூரோப்பியன் 24 ஹெச் சீரிஸ் சாம்பியன்ஷிப் – போர்ஷே 992 ஜிடி 3 கப் கிளாஸ் கார் பந்தயத்தில் பங்கேற்கவுள்ள நடிகரும், நண்பருமான அஜித்குமாருக்கு எங்களுடைய மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

நம்முடைய தமிழக விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் லோகோவை ‘அஜித்குமார் ரேசிங்’ யூனிட்டின், கார், ஹெல்மெட் மற்றும் பந்தயம் தொடர்பான உபகரணங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். இதன்மூலம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறையை உலக அரங்கில் பெருமைப்படுத்தி, ஊக்குவித்துள்ள அஜித்குமாருக்கு தமிழக விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பாக எங்களது நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள், இரவு நேர சாலை பார்முலா 4 கார் பந்தயம் போன்ற முன்னெடுப்புகளை வாழ்த்திய அஜித்குமாருக்கு எங்கள் அன்பும், நன்றியும். விளையாட்டுத் துறையில் தமிழகத்தை உலக அரங்கில் உயர்த்திட ஒன்றிணைந்து செயல்படுவோம். கார்பந்தய போட்டியில் வென்று தமிழகத்துக்கு நீங்கள் பெருமை சேர்த்திட வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டிருந்தார்.

# அன்பு, அமைதி, செல்வம் நிலைத்து; விஜய் தீபாவளி வாழ்த்துச் செய்தி



“அனைவரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் அன்பு, அமைதி, செல்வம், நிலைத்து நீடித்திருக்கட்டும்.”

– இவ்வாறு நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்து பதிவில்,

“தீப ஒளி வெள்ளத்தில் காரிருள் விலகி, நல் விடியல் பிறக்கட்டும். அனைவரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் அன்பு, அமைதி, செல்வம், நிலைத்து நீடித்திருக்கட்டும். தீப ஒளித் திருநாளை பாதுகாப்பாக கொண்டாடி மகிழ்வோம். அனைவருக்கும் இனிய தீப ஒளித் திருநாள் நல்வாழ்த்துகள்.” என தெரிவித்துள்ளார்.








# லெபனானில் இஸ்ரேல் நடத்திய தொடர் தாக்குதலில் 15 பேர் பலி

தெற்கு லெபனானில் இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கு லெபனானில் உள்ள சிடன் நகருக்கு அருகில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

அதேநேரம் காசாவில் நேற்று முன்தினம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 132 பேர் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தெற்கு லெபனானில் இடம்பெற்ற மோதலில் 33 இஸ்ரேல் இராணுவத்தினர் உயிரிழந்தனர் என இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சொந்த விண்வெளி நிலையத்திற்கு 3 வீரர்களை அனுப்பியது சீனா







சீனா, தனது சொந்த விண்வெளி நிலையத்திற்கு 3 விண்வெளி வீரர்களை அனுப்பியுள்ளது.

அவர்கள் நேற்று அதிகாலை ஷென்சோ-19 என்ற விண்கலத்தில் புறப்பட்டனர்.

இந்த விண்கலம் வடமேற்கு சீனாவில் உள்ள ஜியுகுவான் செயற்கைக்கோள் ஏவுகணை மையத்திலிருந்து லாங் மார்ச்- 2எப் கேரியர் ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.

ஏவப்பட்ட 10 நிமிடங்களுக்குப் பிறகு, ஷென்சோ-19 விண்கலம் ரொக்கெட்டிலிருந்து பிரிந்து நிர்ணயிக்கப்பட்ட சுற்றுப்பாதையை வெற்றிகரமாகச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 விண்வெளி வீரர்களும் 6 மாதம் தங்கியிருந்து ஆராய்ச்சி பணியில் ஈடுபட உள்ளதாகச் சீனா தெரிவித்துள்ளது.









# ஸ்பெய்னில் வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை உயர்வு

ஸ்பெய்னின் தென்கிழக்குப் பகுதியில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி இதுவரையில் 51 பேர் உயிரிழந்தனர்.

வெள்ளத்தில் சிக்கி பலர் காணாமல் போயுள்ள நிலையில், ஆளில்லா விமானங்கள் மூலம் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

1,000 இற்கும் மேற்பட்ட மீட்புக் குழுவினர், மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் ஸ்பெயின் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வெள்ளஅனர்த்தம்காரணமாகத்ரயில்சேவைகள்இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
















# தேர்தல் முறைப்பாடுகள் ஆயிரத்தை கடந்தன

எதிர்வரும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1,042 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 297 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 745 முறைப்பாடுகளும், 21 ஏனைய முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 103 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவம் எதுவும் பதிவாகவில்லையெனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாகக் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இதுவரை 10 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 863 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 179 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# ஒக்டோபர் மாதத்தில் பணவீக்கம் வீழ்ச்சி



கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த செப்டெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த செப்டெம்பர் மாதத்தில் மறை 0.5 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் இந்த மாதத்தில் மறை 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம், கடந்த மாதம் செப்டம்பர் மாதம் மறை 0.3 ஆக இருந்த உணவு பணவீக்கம் இந்த மாதம் சிறியளவு உயர்ந்தும் ஒரு சதவீதமாக பதிவாகியுள்ளது.

அத்துடன், செப்டம்பர் மாதத்தில் மறை 0.5 ஆக இருந்த உணவல்லா பணவீக்கம் மறை 1.6 ஆக ஒக்டோபரில் வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிறுபான்மைச் சமூகத்தவர்களை ஆதரிப்பதற்கு புதிய ஆட்சி இதுவரை எதுவுமே செய்யவில்லை

## இலங்கை வாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பு சுட்டிக்காட்டு



"தேசிய மக்கள் சக்தி உண்மையிலேயே சமத்துவம் மற்றும் நீதிக்காக நிற்கிறது என்றால், சிறுபான்மை சமூகங்களை ஆதரிப்பதற்காக அதன் முதல் ஐம்பது நாள்களில் சிறிதும் செய்யப்படவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும்."

– இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றது இலங்கை வாழ் தமிழர் நலன் விரும்பிகள் அமைப்பு. அதன் உலகளாவிய ஒருங்கிணைப்பாளர் ராஜ் சிவநாதன் இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:–

பின்வரும் முக்கியமான பிரச்சினைகளில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்து செயற்படும் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி உரையாற்றுவது மிகவும் அவசியமாகும். தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை ஏற்றுக்கொண்ட போதிலும், மேற்பார்வையின்றி தொடர்ந்து கடமையில் ஈடுபடும் துறை ஊழியர்களின் செயல்பாடுகளை விசாரிக்கவோ அல்லது நிவர்த்தி செய்யவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அண்மையில், மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் மண்டைதீவைச் சூழவுள்ள இந்து வழிபாட்டுத் தலங்களில் பொதுமக்களின் காணிகள் கடற்படையின் பயன்பாட்டிற்காக பரிசீலிக்கப்படும் பிரதேசங்களில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கான திணைக்களத்தின் முயற்சிகள் பொதுமக்களின் எதிர்ப்பினால் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டன. முந்தைய கோட்டாபய நிர்வாகத்தின் கொள்கைகளை தேசிய மக்கள் சக்தி தொடர்ந்தால், அது பொதுமக்களின் உணர்வைத் தூண்டிவிடும் அபாயம் உள்ளது.

இலங்கையின் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் நெருக்கமாக இணைந்திருக்கும் சர்வதேச புலம்பெயர் பிரதிநிதிகள் என்ற வகையில், பின்வரும் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தேசிய மக்கள் சக்தி வலுவான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதில் நாங்கள் கவலை கொள்கிறோம்.

– பௌத்த பிக்குகளால் அங்கீகரிக்கப்படாத காணி சுவீகரிப்புகளை நிறுத்துதல்.

– தனியார் நிலம் மற்றும் இந்து கோவில் பகுதிகளில் தொல்லியல் ஆய்வுகளை நிறுத்துதல்.

– ஏற்கனவே தண்டனையை விட அதிகமாக அனுபவித்த அரசியல் கைதிகளை விடுதலை செய்தல்.

பல தசாப்தங்களாக மூடப்பட்டிருந்த பலாலி பகுதியில் உள்ள வீதிகளை மீளத் திறப்பது, குடியிருப்பாளர்களின் அணுகலைக் கட்டுப்படுத்துவது மற்றும் அவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கிறது.

தேசிய மக்கள் சக்தி உண்மையிலேயே சமத்துவம் மற்றும் நீதிக்காக நிற்கிறது என்றால், சிறுபான்மை சமூகங்களை ஆதரிப்பதற்காக அதன் முதல் ஐம்பது நாள்களில் சிறிதும் செய்யப்படவில்லை என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இந்த செயலற்ற தன்மை தமிழ் சமூகங்களை ஜே.வி.பி.யின் கொள்கைகளில் இருந்து தூரமாக்கி, அமைப்பு ரீதியான பாகுபாடு குறித்த சந்தேகங்களை ஆழமாக்குகிறது.

கொழும்பு மாவட்டத்தில் வீதிகளை திறப்பதற்கு நிறைவேற்று அதிகாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் வீதிகள் மீதான இராணுவக் கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு ஏன் அவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரியவில்லை. முதலீடு மற்றும் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் தேசிய மக்கள் சக்தி தீவிரம் காட்டினால், அடுத்த தேர்தலுக்கு முன், குறிப்பாக தீபாவளி சமயத்தில், தமிழ் சமூகத்திற்கான இந்தக் கவலைகளை நிவர்த்தி செய்வது முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

எங்களின் கவலைகளுக்கு செவி சாய்த்து, உடனடி, அர்த்தமுள்ள நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நாங்கள் உண்மையிலேயே நம்புகிறோம்.

வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் எதிர்பார்க்கும் வெற்றிக்கு முன்கூட்டியே வாழ்த்துக்கள். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிழக்கு, ஊவா மாகாணங்களில் மின்னல் தாக்கம் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை



கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மின்னல் தாக்கம் பதிவாகும் சாத்தியமுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் மாலை அல்லது இரவு வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரித்து காணப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடும் காற்று மற்றும் மின்னல் தாக்கங்களின் போது ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.



# ரயில் நிலைய அதிபர்கள் திடீரென வேலைநிறுத்தம்

ரயில் நிலைய அதிபர்கள் திடீர் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.

பதவி உயர்வு மற்றும் ஆள்சேர்ப்பு உள்ளிட்ட சில சிக்கல்கள் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு தீர்வு கோரி இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் தோல்வியடைந்ததாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த திடீர் வேலைநிறுத்தம் காரணமாக ரயில் பயணிகள் கடும் அசௌகரியத்தை எதிர்கொண்டுள்ளனர்.



# சாதிக்காய் விலை குறைவடைந்தது

சந்தையில் சாதிக்காயின் விலை குறைவடைந்துள்ளது.

இந்த வாரத்தினுள் ஒரு கிலோகிராம் சாதிக்காயின் விலை 950 ரூபாவாக பதிவாகியுள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இதன் விலை 1,000 ரூபாவாக காணப்பட்டது.

# திட்டமிட்டவாறு உயர்தர பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பம்




கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை ஏற்கனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் 20 ஆம் திகதி வரை பரீட்சை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை பிணையில் விடுவித்து உத்தரவு

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை பிணையில் விடுவிக்க கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான 5 சரீரப்பிணைகளில் முன்னாள் அமைச்சரை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.



பதிவு செய்யப்படாத அதிசொகுசு காரொன்று கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

# இன்றைய ராசி பலன்கள் -31.10.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின்உடல்நலத்துக்காகச்செலவுசெய்யநேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்றுபணிகள்இறுக்கமாககாணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -31.10.2024




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.

தூக்கமின்மை மற்றும் பதட்டம் காரணமாக தலைவலி காணப்படும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.


பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.








Muhurtham
Jewels
HAPPY
DIWALI
SHINE BRIGHTLY WITH
THE GIFT OF
Gold


a one
MEDIA NETWORK
இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
உங்களுக்கும்... குடும்ப உறுப்பினர்களுக்கும்...
மகிழ்ச்சி பொங்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்....

# தீபாவளி சிறப்பிதழ் - 2024

# அனைவரும் கொண்டாடும் பண்டிகை தீபாவளி...!



நடராஜன் மிதுனாளினி

தீபாவளி, ஐப்பசி மாதம் அமாவாசை அன்று கொண்டாடும் ஓர் இந்து பண்டிகையாகும் . இந்துக்கள் மட்டுமின்றி சீக்கியர்களும் , சமணர்களும் கூட இப்பண்டிகையை வெவ்வேறு காரணங்களுக்காக கொண்டாடுகின்றனர் .

'தீபம' என்றால் ஒளி , விளக்கு என்றால் என்றால் வரிசை . வரிசையாய் விளக்கேற்றி , இருள் நீக்கி , ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும் .

தீபத்தில் பரமாத்மாவும் , நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம். ஒவ்வொருத்தர் மனதிலும் ஒரு சில இருட்டு உள்ளது . அகங்காரம் , பொறாமை , தலைக்கணம் போன்ற எதையாவது ஒன்றை அகற்ற வேண்டும். ஒரு தீயகுணத்தை எரித்துவிட வேண்டும் .

இந்துக்களின் தீபாவளி இந்துக்கள் திபாவளி கொண்டாடுவதற்கு பல காரணங்களை, புராணக் கதைகளின்வழியாகக் கூறுகின்றனர்.

புராணக் கதைகளின் படி , கிருஸ்ணனின் இருமனைவியருள் ஒருவளான நிலமகளுக்கு பிறந்த மகன் ஒரு அசுரன். அப்போது கிருஸ்ணன் வராக (பன்றி) அவதாரம் எடுத்திருந்தான் . பிறந்த அசுரனின் பெயர் நரகன் . அந்நரகன் , தன் அன்னையால் மட்டுமே தனக்கு இறப்பு ஏற்பட வேண்டும் என்று வரம் வாங்கியிருந்தான். அவனின் அநீதிகளை நிறுத்த வேண்டி, கிருசுணன் தனதுத் திறமையால் அந்நரகாசுரனை இறக்க வைக்கிறான் .

கிருஷ்ணர், நரகாசுரன் என்ற அசுரனைக் கொன்ற போது, அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்று கேட்ட வரத்திற்கிணங்க தீபாவளி மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றது .

இராமாயண இதிகாசத்தில், இராமர் , இராவணனை அழித்து விட்டு, தனது வனவாசத்தையும் முடித்து விட்டு, மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்தி திரும்பிய நாளை, அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்த நாளே தீபாவளியாக கொண்டாடப்படுவதாக கருதப்படுகிறது .

கந்தபுராணத்தின் படி , சக்தியின் 21 நாள் கேதார விரதம்முடிவுற்றது. இத்தினத்தில் தான் விரதம் முடிவடைந்த பின்னர் சிவன், சக்தியை தன்னில்ஒரு பாதியாக ஏற்று 'அர்த்தநாதீஸ்வரர் ' உருவமெடுத்தார் .

தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுவர் . இல்லத்தின் மூத்த உறுப்பினர் ஒவ்வொருவர் காலிலும் நலங்கு (மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த கலவை) இட்டு மகிழ்வர். பின் எண்ணெய்க் குளியல் (கங்கா குளியல்) செய்வர் . நல்லெண்ணெயில் ஓமம் மற்றும் மிளகு போட்டுக் காய்ச்சுவது சிலரது வழக்கம் . மக்கள் புத்தாடை உடுத்தியும் பட்டாசுகள் வெடித்தும் மகிழ்வர் .

பொதுவாக தீபாவளி அன்று பாரம்பரிய உடைகளை அணியவே பெரும்பாலான மக்கள் விரும்புகின்றனர். அன்று அநேக பெண்கள் புடைவையும் ( குறிப்பாக பட்டுப் புடைவை ) ஆண்கள் வேட்டியும் உடுப்பர் . தீபாவளி அன்று

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

ஒவ்வொரு இல்லத்திலும் மங்கள இசையான நாதசுவரம் ஒலிக்கும் . அன்று இனிப்புக்கள் நிறைய செய்து ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்வர் .

1. குளிப்பதற்கு முன்பு, எண்ணெய் மசாஜ் செய்ய வேண்டும், ஏனெனில் இது நிதி இழப்புகளைத் தடுக்கிறது என்று கருதப்படுகிறது.

2. உங்கள் பரம்பரைக்கு மரியாதை செலுத்துவதற்கு முன்னோர்களின் வணக்கம் செய்யப்பட வேண்டும். பிரதோஷ் காலத்தின் போது, ஆவிகள் வழிகாட்டவும், அவர்களுக்கு சொர்க்கத்துக்கு ஏற உதவவும், அதன் பிறகு நிம்மதியாக ஓய்வெடுக்கவும் விளக்குகள் எரிய வேண்டும்.

3. தீபாவளிக்கு முந்தைய நள்ளிரவு கொண்டாட்டம் வீட்டிலிருந்து வறுமையை அகற்ற உதவுகிறது.



லட்சுமி பூஜை தீபாவளியின் மிகப் பெரிய அம்சமாகும். இந்த புனித நாளில், லட்சுமி தேவி, விநாயகர் மற்றும் சரஸ்வதி தேவி ஆகியோர் மாலை மற்றும் இரவு நேரங்களில் போற்றப் படுகிறார்கள்.

புராணங்களின்படி, லட்சுமி தேவி பூமிக்கு இறங்கி, ஒவ்வொரு வீட்டையும் பார்வையிடுகிறார். எந்தவொரு வீடும் நேர்த்தியான மற்றும் காலம், தெய்வத்தால் வசிக்கத் தேர்ந் தெடுக்கப் படுகிறது, எனவே லக்ஷ்மி தேவியைப் பிரியப்படுத்தவும், அவரது தெய்வீக ஆசீர்வாதங்களை அனுபவிக்கவும் இந்த சரியான தருணத்தில் வீட்டை முறையாக சுத்தம் செய்து விளக்கு ஏற்றி வழிபாடு செய்யப்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

1. வீட்டை சுத்தம் செய்து, லக்ஷ்மி பூஜைக்கு முன் தூய்மையின் சாரத்துக்காகப் புனித கங்கா நீர் தெளிக்கவும். மெழுகுவர்த்திகள், களிமண் விளக்குகள் மற்றும் கோலங்களால் வீட்டை அலங்கரிக்கவும்.

2. ஒரு பூஜைக்காக பலகை உருவாக்கவும். அதன் மேல் ஒரு சிவப்பு துணியைப் பரப்பி, லக்ஷ்மி தேவி மற்றும் விநாயகர் சிலைகளை அதன் மேல் வைக்கவும். இரண்டின் படத்தையும் ஒரே நோக்கததுக்காகப் பயன்படுத்தலாம். பலகை அருகே தண்ணீர் நிரப்பப்பட்ட ஒரு கலாஷ் வைக்கவும்.

3. லட்சுமி தேவி மற்றும் விநாயகர் மீது மஞ்சள் மற்றும் குங்குமம் போட்டு வைக்கவும். ஒரு விளக்கு (களிமண் விளக்கு) ஏற்றி, சந்தனம், அரிசி, மஞ்சள், குங்குமப்பூ, அபீர், குங்குமம் போன்றவற்றை வைத்து உங்கள் பக்தியை வழங்குங்கள்.

4. லட்சுமி பூஜைக்குப் பிறகு, சரஸ்வதி, காளி தேவி, விஷ்ணு மற்றும் குபேரர் ஆகியோரை வணங்குவது சடங்குகளின் போது செய்யப்படுகிறது.

5. பூஜை விழாக்கள் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து செய்யப்பட வேண்டும்.

6. லட்சுமி பூஜையைத் தொடர்ந்து, புத்தகங்கள், கழிப்பிடங்கள், வணிகம் அல்லது செல்வம் தொடர்பான பிற உபகரணங்களுக்கு மரியாதை செலுத்தலாம்.

7. பூஜை முடிந்ததும், இனிப்புகள் மற்றும் பிரசாதம் விநியோகம், தேவைப்படுபவர்களுக்கு தொண்டு போன்ற நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும்.

தீபாவளி இலேகியம் ( செரிமானத்திற்கு உகந்தது) அருந்துவதும் மரபு.

தீபாவளியன்று நீராடுவதை மட்டும் புனித நீராடல் என்று சொல்வதற்கு காரணம் , அன்றைய தினம் , அதிகாலையில் எல்லா இடங்களிலும் , தண்ணீரில் கங்கையும் , எண்ணெயில் லட்சுமியும் அரப்பில் சரஸ்வதியும் , குங்குமத்தில் கௌரியும் , சந்தனத்தில் பூமாதேவியும் , புத்தாடைகளில் மஹாவிஷ்ணுவும் வசிப்பதாக கருதப்படுவதேயாகும் . அந்த நீராடலைத்தான் “ கங்கா ஸ்நானம் ஆச்சா” என்று ஒருவருக்கொருவர் விசாரிப்பர் . அன்றைய தினம், எல்லா நதிகள் , ஏரிகள் , குளங்கள், கிணறுகளிலும் , நீர்நிலைகளும் “ கங்கா தேவி” வியாபித்து இருப்பதாக ஐதீகம் .

தீபாவளி இந்துப் பண்டிகையாய் இருந்தாலும், அனைவரும் ஒற்றுமையாய் கொண்டாடும் பண்டிகை தீபாவளி. தீபம் என்றால் வெளிச்சம். ஒவ்வொருத்தர் மனதிலும் ஒரு சில இருட்டு உள்ளது. அகங்காரம், பொறாமை, தலைக்கனம் போன்ற எதையாவது ஒன்றை தூக்கிப்போட வேண்டும். ஒரு தீய குணத்தை எரித்துவிட வேண்டும் இத் தீபத்திருநாளில் நாம் அனைவரும் எமது இருளை அகற்றி மனதில் புத்தொளயை ஏற்றி எதிர்காலத்தினை வசப்படுத்துவோம்

தீபாவளி இந்துப் பண்டிகையாக இருந்தாலும், அனைவரும் ஒற்றுமையாய் கொண்டாடும் பண்டிகையாகும்.

# நாட்டில் அனைவரும் கைகோர்க்க தீபத் திருநாள் வழிவகுக்கட்டும்...!

## ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாஸ



அறியாமை இருளை அகற்றி ஞானத்தின் ஒளியால் உலகமே ஒளிமயமாகட்டும்.

உலகெங்கிலும் உள்ள இந்து மக்களின் இதயங்களை ஒளிமயமாக்கும் தீபாவளி திருநாளை முன்னிட்டு, இலங்கை மற்றும் உலகெங்கிலும் வாழும் இந்து மக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பெரும் இருளை ஒரு சிறு விளக்கொளியால் அகற்ற முடியும். அதற்குத் தேவையானது சரியான பார்வையும் வழிகாட்டுதலும் மட்டுமே.

அறியாமை இருளை அகற்றி ஞானத்தின் ஒளியால் உலகை ஒளிமயமாக்கும் தீபாவளி பண்டிகை நமக்கு உணர்த்துவதும் இதுவேதான்.

ஒரு நாடாக இந்த தருணத்தில் நமக்கு பல சவால்கள் உள்ளன. இந்த சவால்கள் அனைத்தையும் வெற்றி கொள்ள முடிவது இனம், மதம், சாதி, குலம், கோத்திர வேறுபாடுகளின்றி அனைவரும் கைகோர்த்தல் மட்டுமே.

அவ்வாறு அனைவரும் கைகோர்க்க இன்று ஏற்றும் ஒரு விளக்கொளி வழிவகுக்கட்டும். அன்பு, கருணை, ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகிய அனைத்து உணர்வுகளையும் ஒளிரச் செய்து, ஒருவருக்கொருவர் வெறுப்புக்குப் பதிலாக சகோதரத்துவத்தை பரப்பும் தீபாவளி விளக்கொளியால் உலக மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடையட்டும் என பிரார்த்திக்கிறேன்.– என்றுள்ளது.

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்!

## செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் தீபாவளி ஆசிச்செய்தி!!



அறம் வென்று இருள் அகன்ற நாளாகிய தீபாவளி திருநாளில் அனைவருக்கும் நல் வாழ்த்துக் கூறுவதில் ஆனந்தமடைகின்றேன்.

இயற்கையை படைத்த இறைவன் எல்லோரும் அன்பாக வாழ வழி செய்தான். எனினும் சிலரிடம் உள்ள அறியாமை பலருக்கு இடையூறாக அமைவது உண்டு.

இவ்வாறு, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர், சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அவரது ஆசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நரகாசூரன் என்ற அசுரன் பலரை துன்பப்படுத்தியதன் விளைவாக கிருஷ்ண பரமாத்மாவால் அழிக்கப்பட்டான். இறப்பின் எல்லையை சந்தித்த நரகாசூரன் அவ்வேளையில் தர்மத்தை உணர்ந்து கொண்டான். அவனே உலகுக்கு விடிவு கிடைத்த நாளாக இந்நாளை கருதுமாறு வாக்குமூலம் கொடுத்தான். அன்றுமுதல் தீபாவளி கொண்டாடப்படுகிறது என்பது சமய வரலாறு.

இன்றும் எங்கள் மத்தியில் தீமைகள் மலிந்து போய் இருக்கின்றன. தத்தம் தேவைகளுக்காக எத்தீமையையும் செய்வதற்கு பலர் துணிகிறார்கள்.

பாவம் அறியாமைதான் இதற்குக் காரணம். ஆனந்தமாக வாழவேண்டிய நாள்களை ஆணவத்தால் தொலைக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். எங்கும் தர்மம் நிலைக்க வேண்டும். எங்கள் மண்ணில் ஒற்றுமை நிலைக்க வேண்டும். பதவிகளுக்காக பகையை வளர்க்கக்கூடாது.

அன்பைப் பெருக்குங்கள். உண்மையான இறைபக்தியை வளர்த்துக் கொள்ளுங்கள். தூய மனித நேயத்தைக் காத்துக் கொள்ளுங்கள். கருணை இரக்கம் போன்றவற்றைக் கைவிட்டு விடாதீர்கள். இனிய தீபாவளித் திருநாளில் குடும்பம் குடும்பமாக கோவில்களுக்குச் சென்று இறைவழிபாட்டில் ஈடுபடுங்கள். உற்றார் உறவினரைப் பேணுங்கள். நல்ல நற்பை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நல்ல காரியங்கள் செய்வதற்கு முன்வாருங்கள். மனித வாழ்வின் பெறுமதியை உணர்ந்து மாசற்ற வாழ்வு வாழ முயற்சி செய்யுங்கள். அனைவருக்கும் இதயபூர்வமான வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.– என்றுள்ளது.

# இருள் நீங்கி இன்னொளி பரவட்டும்!



உலகம் எங்கும் வாழும் இந்துக்களால் தீபாவளி பண்டிகை இன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. நமது இதிகாச புராண வரலாறுகளின்படி நரகாசுரன் என்ற அசுரன் அழிந்ததையே நமது முன்னோர்கள் தீபாவளிப் பண்டிகையாக கொண்டாடி மகிழ்கின்றனர்.

முன்பு ஒரு சமயம் திருமால் வராக அவதாரம் எடுத்து, பூமியைத் துளைத்து, அசுரர்களை அழிக்கச் சென்றபோது, அவரின் ஸ்பரிசத்தால் பூமாதேவிக்குப் பிறந்தவன் நரசுரன். அசுர வதத்தின் போது பிறந்தவன் என்பதால் அசுர குணம் இயல்பாகவே அவனுக்கு அமைந்தது. யாராலும் தன்னை அழிக்க முடியாத வரம் பெற்ற நரகாசுரன் தேவர்களையும் மக்களையும் துன்புறுத்தி வந்தான். காக்கும் கடவுளாம் நாராயணப் பெருமான் நரகாசுரனுடன் போரிட்டு தேவர்களையும் மனிதர்களையும் காத்தருளினார். தன்னுடைய மரணம் அனைவராலும் மகிழ்ச்சியாகக் கொண்டாடப்பட வேண்டும் என்ற அவன் விருப்பத்தினாலேயே மக்கள் பட்டாசு கொளுத்தி, இனிப்புகள் வழங்கி, இத்தினத்தைக் கொண்டாடும் மரபு உருவாகியது.

தீபாவளியன்று அனைவரும் அதிகாலையில் துயில் விட்டெழுந்து எண்ணை ஸ்நானம் செய்து, மகாலட்சுமி பூஜை செய்து, வீடு முழுவதுமே விளக்கேற்றி வைத்தால் லட்சுமி கடாட்சம் கிட்டும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அனைவர் வாழ்விலும் துன்பங்கள் நீங்கி, இன்பங்கள் சேரட்டும். இன்னல் நீங்கி ஒளி வீசட்டும்.

அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் பாதம் பணிந்து அனைவருக்கும் அடியேனின் இனிய தித்திக்கும் தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாக வாழ்த்துகிறேன்.

**வாழ்க வளமுடன்.**
**சுபம் மங்கலம்.**
**அன்பே சிவம்.**

'சிவாகம சித்தாந்த ஞான தேசிக பானு'
சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி தேசிகர் (ஜே.பி.)
பிரதம குரு - வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.
பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும் -
தென் புலோலி புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்.

# இந்த வருட தீபாவளி சிறப்பானது ஏன்?

## தீபாவளிச் செய்தியில் விபுலமாமணி வழிகாட்டல்



'தீபம்' என்றால் ஒளி, விளக்கு. 'ஆவளி' என்றால் வரிசை. வரிசையாய் விளக்கேற்றி, இருள் நீக்கி, ஒளிதரும் பண்டிகையே தீபாவளி ஆகும். தீபத்தில் பரமாத்மாவும், நெருப்பில் ஜீவாத்மாவும் வாசம் செய்து அருள் தருவதாய் ஐதீகம்.

தீபாவளி பண்டிகை இந்த ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதி வியாழக்கிழமை இன்று கொண்டாடப்படுகிறது.

வியாழக்கிழமை என்பது மங்கலகாரகனான குரு பகவானுக்கு உரிய நாள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் அது தவிர இந்த ஆண்டு தீபாவளிக்கு வேறு சில சிறப்புக்களும் உள்ளன.

வழக்கமாகப் பெரும்பாலான ஆண்டுகள் தீபாவளி திருநாள், அமாவாசையுடன்தான் இணைந்து வரும். ஆனால் இந்த ஆண்டு இன்று ஒக்ரோபர் 31 ஆம் திகதி மாலை 04.29 மணிக்குத்தான் அமாவாசை திதி ஆரம்பமாகிறது.

மிக அரிதாக இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை, சுப நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான சுபமுகூர்த்த நாளில் அமைந்துள்ளது. அதிலும் அன்று நாள் முழுவதும் சித்திரை நட்சத்திரம் உள்ளமை மற்றொரு தனிச்சிறப்பு.

சித்திரை நட்சத்திரம் என்பது சக்கரத்தாழ்வார், சித்ரகுப்தர், விஸ்வகர்மா ஆகியோர் அவதரித்த நட்சத்திரமாக சொல்லப்படுகிறது. இவர்கள் மூவருமே வாழ்க்கையில் வளர்ச்சி, கலைகளில் தேர்ச்சி, பலவிதமான செல்வ நலன்களையும் வழங்கக் கூடியவர்கள். ஞானத்தை அருளும் குரு பகவானுக்குரிய வியாழக்கிழமையில், சித்திரை நட்சத்திரமும் இணைந்த நாளில் இந்த ஆண்டு தீபாவளி வருகிறது. அதிலும் நல்ல விடயங்களை ஆரம்பிப்பதற்கு ஏற்ற மங்கலகரமான சுபமுகூர்த்த நாளுடன் வருகிறது.

அதனால் தீபாவளி அன்று மங்கல பொருள்கள் வாங்கலாமா? எப்போது இருந்து அமாவாசை விரதம் கடைபிடிக்க வேண்டும் என்ற குழப்பம் இந்த ஆண்டு கிடையாது. இந்த ஆண்டு தீபாவளி திருநாளான ஒக்ரோபர் இன்று 31 ஆம் திகதியன்று நாள் முழுவதும் சித்தயோகம் உள்ளதால் தாராளமாகப் புதிய விடயங்களைத் தொடங்கலாம்.

அறியாமை என்னும் இருள் நீக்கி வெற்றியையும் ஒளிமயமான சிந்தனையையும் இந்தத் தீபத் திருநாள் பெற்றுத் தர வேண்டும்.

நரகாசுரனை வதைத்த தினத்தை வீடுகளில் தீபஒளி ஏற்றி மனஇருள் நீக்கி தீபாவளி பண்டிகையாக கொண்டாடும் இத்தருணத்தில் தமிழர்களது பாரம்பரியமான பண்பாடுகளால் நம் திறமைகளை வளர்த்து நாட்டை ஒளி நிறைந்ததாக மாற்ற வேண்டும் என்றும் நல்ல மழை பொழிந்து வேளாண்மை செழிப்பாக வேண்டும்.

தீபாவளி அனைவர் வாழ்விலும் ஒளி ஏற்றட்டும்.

**வித்தகர் விபுலமாமணி**
**வி.ரி. சகாதேவராஜா,**
**காரைதீவு.**

# ஐக்கியப்படும் அரசியல் சித்தாந்தமே நாட்டில் அதர்மங்களை அழிக்கும்!

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன்



ஐக்கியப்படும் அரசியல் சித்தாந்தமே நாட்டிலுள்ள அதர்மங்களை அழிக்கும். தீபாவளி தினத்தில் தீய எண்ணங்கள் விலகி, நாட்டுக்கு சபீட்சம் கிடைக்கட்டும்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தீபாவளி தினத்தை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று தீபாவளியைக் கொண்டாடும் சகல தமிழ் சகோதரர்களையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். நரகாசுரன் ஒழிக்கப்பட்ட இத்தினம், கெட்ட எண்ணங்கள் நிலைப்பதை எதிர்க்கிறது. மானிடப்பிறவிகள் மத்தியில், தீய எண்ணங்களை உருவாக்கும் எந்த சக்திகளும் நிலைக்காது. இந்த யதார்த்தத்தை உணர்த்தும் வகையில் இத்தினம் அமைந்துள்ளது.

ஆலயங்கள் தோறும் இன்று தமிழ்ச் சகோதரர்கள் நன்மை நிலைக்கப் பிரார்த்திக்கின்றனர். அதேபோன்று, எமது நாட்டிலும் தீமைகள் விலகி, நன்மைகள் நிலைக்க, இந்த நாளின் மகத்துவம் வழிகோலட்டும். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளில் தமிழர்கள் அனுபவித்த துன்பங்கள் ஏராளம். இத்துன்பங்கள் நிரந்தரமாக நீங்கி அமைதி நிலைக்கட்டும்.

பொதுத் தேர்தலுக்கான அரசியல் களம் சூடு பிடித்துள்ள இந்தச் சூழலில், நமக்கான அமைதித் தீர்வுகளுக்கு நாமே வழிசமைக்க வேண்டும்.

நல்லதொரு அரசியல் கலாசாரம் பிறக்கவும் தமிழ் மக்கள் இந்நாளில் பிரார்த்திப்பது அவசியம். சகல இனங்களும் ஐக்கியப்படும் அரசியல் சித்தாந்தம் நிலைத்தாலே, இந்த நாட்டில் அதர்மங்கள் அழியும்.– என்றார்.

✪✧✪✧✪✧✪

# புதிய வாய்ப்புகளை உருவாக்கி பிறந்துள்ளது தீபத் திருநாள்!

## தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளர் ரமேஸ்வரன்



தீபாவளி பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்படும் இந்த இனிய வேளையில், இலங்கையில் வாழும் என் சக இந்துக்களுடன் எனது இதயம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தீப திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தனது கொடுஞ்செயல்களால் மக்களை பெருந்துன்பத்துக்கு ஆளாக்கிய கொடிய அரக்கனை திருமால் அழித்த தினமே தீபாவளி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

மறம் வீழ்ந்து, அறம் வென்ற நாளாகவும், தீமைகள் அழிந்து நன்மைகள் பெருகிடும் நன்னாளாகவும் தீபாவளி திருநாள் விளங்குகிறது.

தீபத் திருநாளன்று, மக்கள் அதிகாலை எண்ணெய்க் குளியல் முடித்து, புத்தம் புதிய ஆடைகளை அணிந்து, தீபாவளி என்ற சொல்லின் பொருளுக்கேற்ப இல்லங்களில் வரிசையாக தீப விளக்கேற்றி, தங்கள் வாழ்வு சிறக்க கடவுளை வணங்கி, பல வகையான இனிப்புகளையும் பலகாரங்களையும் நண்பர்களோடும் உறவினர்களோடும் பகிர்ந்துண்டு, பட்டாசுகளை வெடித்து தீபாவளி பண்டிகையை மக்கள் தங்கள் உற்றார் உறவினர்களுடன் கோலாகலமாக கொண்டாடுவார்கள்.

இந்த தித்திக்கும் தீபாவளித் திருநாளில், மக்கள் அனைவரின் வாழ்விலும் நலமும் வளமும் பெருகட்டும். அறியாமையால் ஏற்படும் இருளை அகற்றி அனைத்துத் துறைகளிலும் வெற்றி, ஒற்றுமை, ஆரோக்கியம் மற்றும் மேம்பாட்டை உருவாக்கட்டும்.

தீப ஒளிகளின் திருவிழா, நல்ல வலிமையுடன் அனைவரும் இணைந்து பணியாற்ற புதிய வாய்ப்புகளை உருவாக்கி இருக்கின்றது. எனவே இந்த தீபாவளி திருநாள் மலையக மக்கள் அனைவரின் வாழ்விலும் இருளை அகற்றி வளர்ச்சியையும் வெற்றியையும் ஏற்படுத்தட்டும்.– என்றுள்ளது.

✪✧✪✧✪✧✪